## சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திருமதி ச.தீபாதெரசாள், த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.எஸ்.சவேரியார் பிச்சை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை செயதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண். 38

நாள் : 24.06.2020
சார்வரி, ஆனி : 10
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் கடிதம் எண். அ2/6922/2019, நாள் 31.07.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1)த்துறை, நாள் 23.01.2020.

---

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த இயந்திரங்கள் உபகோட்டம் எண்.3, திருவிழான்பட்டி மதுரை அலுவலகத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.எஸ்.சவேரியார் பிச்சை பணியலிருக்கும் போது 13.11.2005 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர்/ மகளுமான திருமதி ச.தீபாதெரசாள் என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் அளிக்கப்பட்டு, அவர் 27.08.2018 முற்பகல் முதல் அப்பதவியில் சேர்ந்து சிவகங்கை, சருகனியாறு வடிநில கோட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் மார்ச் 2001– இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியர் பிறந்த தேதி 20.04.1984 என்றும் தெரிவித்து, தேவையான சான்றாவணங்களை அனுப்பி வைத்து தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 27.08.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திருமதி ச.தீபாதெரசாள், இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித்துறையில், கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 27.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா.எண். 3179/க்யூ2/2020, நாள்.12.05.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண்.11940/ஜி2/2020, நாள் 19.05.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
திருமதி ச.தீபாதெரசாள், இளநிலை உதவியாளர்.
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை –2 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை –18.

நகல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை /
பணியாளர் மற்றும் நிருவாகச்சீர்திருத்தத்துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்